பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 17 செவ்வாய்க்கிழமை (01-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 211

## ★ ஹொங்கொங் நேற்றிரவு சீனாவிடம் ஒப்படைப்பு

ஹொங்கொங், ஜூலை 1

இந்த நூற்றாண்டின் சிறப்பு நிகழ்வு என வர்ணிக்கப்படும் சீனாவிடம் ஹொங் கொங்கைக் கையளிக்கும் வைபவம் நேற்றிரவு கோலாகலமாக நடந்தேறியது.

நேற்றிரவு ஹொங் கொங் நேரப்படி சரியாக 11 மணி 59 நிமிடத்துக்கு (இலங்கை நேரம் 9 மணி 59 நிமிடத்துக்கு) பிரிட்டிஷ் கொடி அங்கு இறக்கப்பட்டது. அதன் பின்னர்—

பிரிட்டிஷ் மகாராணியாரின் விசேட பிரதிநிதி இளவரசர் சார்ள்ஸ் சீன அதிபர் ஜியாங் செமினிடம் ஹொங் கொங்கின் இறைமை அதிகாரங்களை சம்பிரதாய பூர்வமாகக் கையளித்தார். அதன் பின்னர் சீனாவின் கொடியும், ஹொங் கொங்கில் சீனா நியமித்த விசேட நிர்வாகப் பிராந்தியத்தின் கொடியும் ஏற்றப்பட்டன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை:

## அரசுக்கு எதிராக வாக்களிக்க தமிழ்க் கட்சிகள் இரகசிய முடிவு?

கொழும்பு, ஜூலை 1

அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பான வாக்கெடுப்பில் அரசுக்கு எதிராக வாக்களிப்பது எனத் தமிழ் அரசியல் கட்சிகள் இரகசியமாகத் தீர்மானித்துள்ளன எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏழு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பான ''தமிழர் மன்றம்'' இவ்வாறு முடிவெடுத்துள்ளதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

இருப்பினும் அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இது குறித்து இன்னும் இறுதி முடிவுஎடுக்கவில்லை.

இந்த முடிவு குறித்து முஸ்லிம் காங்கிரஸுக்குத் தெரிவித்து அவர்களது ஒத்துழைப்பையும் பெறவேண்டும் என சில தமிழ்க் கட்சிகள் யோசனை கூறினவாம்.

எவ்வாறாயினும் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ. பி. டி. பி. ஆகிய கட்சிகள் அவசர காலச் சட்ட நீடிப்புத் தொடர்பான வாக்களிப்பின் போது அரசாங்கத்திற்கு எதிராகக் கட்டாயம் வாக்களிக்கும் எனச் சில வட்டாரங்கள் தெரிவித்தன:

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையால் தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர் எனவும் —

இதை அரசுக்கு உணர்த்தும் வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி விவாதத்தின் போது சபையிலிருந்து வெளிநடப்புச் செய்யவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை அவசரகலச் சட்ட நீடிப்பு வாக்கெடுப்பின் போது அரசை எதிர்த்து வாக்களிப்பது என முன்னர் தீர்மானித்த லலித்குழுவினர்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புளியங்குளம் நோக்கி அகோர ஷெல் தாக்கு!

## தொடர்ந்து முன்னேற அரச படைகள் முஸ்தீபு

கொழும்பு, ஜூலை 1

வவுனியாவிலிருந்து முன்னேறி பெரிய மடுவுக்கு அப்பால் - புளியங்குளத்துக்குச் சற்றுத் தொலைவில் - நிலை கொண்டிருக்கும் அரசுப் படைகள் நேற்று புளியங்குளம் நோக்கி அகோர ஷெல் தாக்குதல்களை நடத்தியதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படைகள் தொடர்ந்து முன்னேற எடுக்கும் முஸ்தீபு நடவடிக்கையாகவே இந்த ஷெல் தாக்குதல் அமைந்திருக்கக் கூடும் என்றும் கருதப்பட்டது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை — ஜூலை 5 ஆம் திகதி — கரும்புலிகள் நாளாகும். புலிகளின் முதலாவது கரும்புலி கப்டன் மில்லரின் பத்தாவது ஆண்டு நிறைவு நாளாகிய அன்றைய தினம்—அதனையொட்டி — படையினர் மீது பெருந் தாக்குதல் ஒன்றைப் புலிகள் நடத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தகைய தாக்குதலில் புலிகள் ஈடுபடாமல், அவர்களைத் திசை திருப்பும் நோக்கத்துடன் புளியங்குளம் நோக்கிய தமது படை நகர்வை அரசுப் படைகள் மேற்கொள்ளக் கூடும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஓமந்தைக்கு அப்பால் பெரியமடுவரை முன்னேறிய படைகள் மீது கடந்த 10 ஆம் திகதியும் 24 ஆம் திகதியும் புலிகள் நடத்திய இரு பெரும் ஊடறுப்புத் தாக்குதல்களை அடுத்து, தமது 'வெற்றி உறுதி' படை நடவடிக்கையை ஸ்ரீலங்கா படை வட்டாரங்கள் தற்காலிகமாக இடை நிறுத்தியிருப்பது தெரிந்ததே.

(உ)

### சூட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 1

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலையில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினரான இமாம் என்பவர் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார் எனத் தெரியவந்தது.

(உ)

## கிருஷாந்தி வழக்கு 'ட்ரயல் அட் பாருக்கு'

கொழும்பு, ஜூலை 1

கைதடியைச் சேர்ந்த கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் மூவர் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை மூன்று நீதிபதிகளைக் கொண்ட 'ட்ரயல் அட் பார்' நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டிருக்கின்றது.

நேற்று இந்த வழக்கு பூர்வாங்க விசாரணைக்காகக் கொழும்பு சிரேஷ்ட மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிவான் முனிதாஸ நாணயக்கார முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது இது பற்றிய தகவல் அங்கு வெளியிடப்பட்டது.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஏழு படையினருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதும் —

மற்றும் இருவர் அரச தரப்புச் சாட்சிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதும் — தெரிந்தவையே.

நேற்று இந்த வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது உயிரிழந்தவர்களின் குடும்பத்தின் சார்பில் சட்டத்தரணி ரி. பூபாலனின் அனுசரணையுடன் சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் ஆஜரானார்.

அரச தரப்பில் அரச சட்டத்தரணி செல்வி மகிந்த ரட்ண ஆஜரானார்.

(உ)

## புலிகள் பிரமுகர் திலகர் எங்கே? மீண்டும் வன்னிக்குச் சென்றாரா?

கொழும்பு, ஜூலை 1

விடுதலைப் புலிகளின் சர்வதேச அலுவலகப் பிரமுகர் லோறன்ஸ் திலகர் மீண்டும் வன்னிக்குச் சென்று விட்டாரா?

கொழும்புப் பத்திரிகை வட்டாரம் ஒன்று இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் வன்னிக்குச் சென்றிருந்த திலகர் அங்கு புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் பேச்சு நடத்திய பின்னர் பாரிஸுக்கோ அல்லது வேறு ஒரு வெளிநாட்டுக்கோ திரும்பிச் சென்று விட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

பாரிஸில் திலகருடன் தொடர்பு கொள்ள செய்தி நிறுவனங்கள் பல முயன்ற போதும் அவர் அங்கு இல்லை என புலிகளின் பாரிஸ் கிளையினரால் தெரிவிக்கப்பட்டது.

சமீபத்தில் திலகரின் மிக நெருங்கிய உறவினர் ஒருவரின் மரணச்சடங்கு ஜேர்மனியில் நடைபெற்றது. அதில் கலந்து கொள்வதற்காக திலகரின் பாரியார் பாரிஸில் இருந்து ஜேர்மன் சென்றார்.

ஆனால் மரணச் சடங்கில் திலகர் காணப்படவில்லை. மிக நெருக்கமான உறவினரிடம் மட்டும் திலகர் மீண்டும் வன்னிக்குச் சென்று விட்டதாகவும், அவர் எப்போது திரும்புவார் என அறியமுடியாதுள்ளதாகவும் அவரது பாரியார் கூறியதாகத் தெரிகிறது.

திலகர் மீண்டும் வன்னிக்கு அழைக்கப்பட்டாரா அல்லது வெளிநாடு ஒன்றில் தங்கி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பொலீஸாருடன் ஒத்துழைத்து

## வாக்கு மூலம் அளிக்க சிறிசேன கூரே மறுப்பு

கொழும்பு, ஜூலை 1

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் ஐ. தே. கட்சிச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சிறிசேன கூரே, விசாரணைகளின் போது பொலீஸாருக்கு ஒத்துழைப்புக் கொடுக்க மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், அதற்கான ஆதாரங்கள், தன்னைக் கைது செய்வதற்கான காரணங்கள் ஆகியவற்றைத் தனக்குத் தெரிவிக்காத வரை தான் இரகசியப் பொலீஸாருக்கு எந்தவித வாக்குமூலங்களையும் அளிக்கப்போவதில்லை என்று சிறிசேன கூரே தெரிவித்துவிட்டார் என கூரேயின் சட்டத்தரணிகளை ஆதாரம் காட்டி கொழும்புச் செய்திகள் தகவல் வெளியிட்டன.

(உ-10)

### சண்முகநாதன் பதவியேற்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். அரச அதிபராக க. சண்முகநாதன் நேற்றுப் பதவியேற்றார்.

மேலதிக அரசாங்க அதிபராகப் பதவி வகித்து வந்த இவர் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் யாழ். அரச அதிபராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ். அரச அதிபராகப் [illegible] தன் நேற்றுக் கொழும்பு பயணமானார். (-3)

## இந்தியாவில் தடுத்துவைத்திருந்த 60 சிங்கள மீனவர்கள் விடுவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 1

மதுரையிலும், பெங்களூரிலும் கடந்த ஆறு மாதகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்த 60 மீனவர்கள் நேற்று அவர்களது 12 படகுகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய — இலங்கை வெளிவிவகார அமைச்சர்கள் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இந்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் தமது 12 [illegible] களுடன் இன்று [illegible] கொழும்பை வந்தடைவர் எனத்தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

சாவகச்சேரி - சங்கத்தானை

அருள்மிகு

## ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயில் மஹோற்சவப் பெருவிழா

25-06-1997 புதன்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறுகின்றது.

**தேர்த்திருவிழா:**
03-07-97 வியாழன் காலை 9-30 மணி

**தீர்த்தத் திருவிழா:**
04-07-97 வெள்ளி முற்பகல் 10-15 மணி.

**பூங்காவனத் திருவிழா:**
05-07-97 சனி பிற்பகல் 3-00 மணி.

★ தீர்த்தத் திருவிழா அன்று மாலை தீ மிதிப்பும், காவடியும் இடம்பெறும்.

பிரதம சிவாச்சாரியார்:
"சிவாகம வித்பத்ஜோதி - பண்டிதர்"
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)

- ஆலய பரிபாலன சபை

விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

**தாரணி களஞ்சியம்**
தனங்களப்பு வீதி, சாவகச்சேரி.

(சி/1042)

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவில் உள்ள குருநகர் பகுதியில் வள்ளங்களை வைத்திருப்பவர்களும், வன்னியிலிருந்து கடல் நீர் ஏரியினூடாக இடம்பெயர்ந்தவர்களை ஏற்றிச் கொண்டு வந்த வள்ள உரிமையாளர்களும், உடனடியாகத் தம்மிடம் உள்ள வள்ளங்களை 15 - 07 - 1997 ஆம் திகதிக்கு முன்னர் வந்து எனது பிரதேச செயலகத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

து. வைத்திலிங்கம்,
பிரதேச செயலாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/1041)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சைமன் தங்கராஜா

தோற்றம்: 09 - 11 - 1940
மறைவு: 09 - 07 - 1995

**திதி: 01-07-97**

அன்பாகவும் பாசமாகவும் மனதில் களங்கமில்லாக் கனிவுறு சொல்லினாலும் சிரித்த முகத்துடனும் எம்மை எல்லாம் வழி நடத்திய அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஈராண்டு மறைந்ததே! ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் என்றும் உங்கள் நினைவு எம் இதயங்களை விட்டு அகலாது வாழ்ந்திடுவோம்!

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(47301)

## சந்தேக நபர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஜூலை 1

தமக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து திடீர் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலீஸார் மட்டக்களப்பு — கல்முனை வீதியில் மருதமுனை என்னுமிடத்தில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் எனச் சந்தேகிக்கும் ஒருவரைச் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவரிடமிருந்து கிரனேட் ஒன்றும் சயனைட்டும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-21)

## அகதிகள் தொடர்ந்து வருகை

வன்னிப் பகுதிகளில் இருந்து 600க்கு மேற்பட்ட அகதிகள் நேற்று படகுகள் மூலம் குருநகர் இறங்குதுறையை வந்தடைந்தனர்.

கடலில் நீண்ட தூரத்துக்கு அப்பால் இறக்கிவிடப்பட்ட பலர் நீரில் நடந்து கரை சேர்ந்தனர். இவர்களில் பலர் பாஷையூர் பகுதிக்கும் வந்து சேர்ந்தனர். (ஐ-51)

## ஜி. சீ. ஈ. மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 1

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றுவதற்காக வெளி மாவட்டங்களில் இருந்து விண்ணப்பித்து தற்போது யாழ். மாவட்டம் திரும்பி வந்துள்ளோர் எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் தமது விவரங்களை கல்விப் பணிமனைகளில் சமர்ப்பிக்குமாறு வலயம் - 1 பணிப்பாளர் சு. இரத்தினராசா அறிவித்துள்ளார். (ஐ)

## நெடுந்தீவு அ. அட்டை

நெடுந்தீவு, ஜூலை 1

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான விசேட அடையாள அட்டைகள் தற்சமயம் வழங்கப்படுகின்றன, (இ-111)

## சேவை நலம் பாராட்டுவிழா

திருநெல்வேலி ஜூலை 1

ஆனைக்கோட்டை உப தபால் அதிபராக 22 வருட காலம் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள திருமதி கோகிலா தேவி பரமேந்திரனுக்கு ஆனைக்கோட்டைப் பகுதி மக்களினால் சேவை நலம் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.

ஆனைக் கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாலய மண்டபத்தில் இளைப்பாறிய அதிபர் ந. சிவபாதம் தலைமையில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதியாக யாழ். பிரதம தபால் அதிபர் சு. கோடீஸ்வரன் கலந்து கொண்டார். சட்டத்தரணி மா. தியாகராசா, உதவித் தபால் அதிபர் மு. சண்முகம், கொக்குவில் தபால் அதிபர் நா. ஞான சீலன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இதில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். (இ - 135)

## தேவை

வீட்டோடு அமைந்திருக்கும் சிறிய தொழிலகத்திற்கு ஒரு பெண் லிகிதர் தேவை.

சொந்தக் கைஎழுத்தில் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 636
C/o உதயன்
யாழ்ப்பாணம்.

(48126)

## 2,500 பேர் தரிப்பு

புளியங்குளத்தில் இருந்து 5 மைல் தூரத்தில் உள்ள புதூர் நாகதம்பிரான் ஆலயப் பகுதியில் 2 ஆயிரத்து 500 பொதுமக்கள் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களே அங்கு தங்கியுள்ளனர்.

அங்கு தங்கியுள்ள மக்களுக்கு உதவிகளை வழங்க அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் சுயாதீன முகாம் ஒன்றை அங்கு அமைக்க உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-164-3)

உ

கொக்குவில் மேற்கு - சொர்ணவடலி

## ஸ்ரீ சொர்ணசித்திவிநாயகர் ஆலய 10 ஆம் நாள் அலங்கார உற்சவம்

மேற்படி ஆலயத்தில் 02-07-1997 புதன்கிழமை காலை சங்காபிஷேகம் நடைபெற்று, பிற்பகல் அழகிய பூச்சப்பறத்தில் விநாயகப்பெருமான் வீதியுலா வருவார். அடியார்கள் யாவரும் வந்து விநாயகப் பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

திருவிழா உபயகாரரும்,
தர்மகர்த்தா சபையும்.

(48123)

**LEO CLUB OF MANIPAY PARISH**

WE SERVE

22 — 05 — 97 அன்று நடைபெறவிருந்து பிற்போடப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு சனிக்கிழமை 26 — 0, — 97 நண்பகல் 12 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

— தலைவர்

(48120)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
திரு. பு. முரளிகிருஷ்ணன் அவர்களின்
தந்தையார்

**இ. புஸ்பரத்தினம்**
(உதவி இணைப்பாளர் - வட கிழக்கு மாகாண இணைப்பு அலுவலகம்)

அவர்கள் இறைபதம் எய்தியமை குறித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆணையாளர், வேலைப்பகுதியினர்,
யாழ். மாநகரசபை.

(48128)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 18 — 03 — 1940
மறைவு: 01 — 06 — 1997

**திருமதி துரைராஜா பரமேஸ்வரி**

அன்போடும், பண்போடும் எல்லோரையும் ஆதரித்த எங்கள் அம்மாவே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஒரு திங்கள் ஆனாலும், ஓராயிரம் நாள்வரை உங்களை நாம் நினைத்திருப்போம். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைத் தினமும் வேண்டுகிறோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

33, கொண்டலடி லேன்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(48122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளின் பிரமுகர்கள்
# ஹொங்கொங்கில் கூடினர்!

## ஆசியாவில் கடைசி காலனித்துவ ஆட்சிக்கு முடிவு

ஹொகொங், ஜூலை 1
சுமார் ஒன்றரை நூற்றாண்டு கால பிரிட்டிஷ் ஆட்சியின் பின்னர் ஹொங் கொங்கை சீனாவிடம் மீண்டும் கையளிக்கும் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக உலகப் பிரமுகர்கள் பலரும் நேற்று ஹொங் கொங்கில் கூடினர்.

ஹொங்கொங் கையளிப்பு ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஹொங்கொங் கையளிப்பு பிரிட்டனுக்கும் சீனாவுக்கும் இடையிலான தடைக்கல்லாக இருக்க மாட்டாது என்றும் —

அதற்கு மாறாக நட்புறவுப் பாலமாக அமையும் என்றும் — ரொனி பிளேயர் நம்பிக்கை வெளியிட்டார்.

சீனப் பிரதமர் லீ பிங்கை அவர் ஹொங் கொங்கில் சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்து விவாதித்துள்ளார்.

அதே சமயம் ஆசியாவில் கடைசி காலனித்துவ ஆட்சிக்கு முடிவு ஏற்பட்டிருப்பதாக ஹொங்கொங் கையளிப்புக் குறித்து இந்தியப்பிரதமர் குஜரால் கருத்து தெரிவித்துள்ளார். (இ)

# குர் - ஆன் கற்கச்சென்றசிறுவன் 6 மாதமாக வீடு திரும்பவில்லை!
## தலிபானுடன் சேர்ந்துவிட்டாராம்!!

கராச்சி ஜூலை 1
கராச்சியில் மருக் அஹமட் என்பவர் தனது 13 வயது மகனை திருக்குர் ஆன் கற்றுவர பள்ளிக்கு அனுப்பினார். ஆனால் அவன் இப்போது ஆப்கானிஸ்தானின் அடையாளம் தெரியாத பகுதியில் தலிபானுடன் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆறுமாத காலமாக தனதுமகனை தேடி அலைந்து விரக்தியுற்ற அவர், 'நான் எனது மகனை திருக்குர் ஆன் படிக்கத்தான் அனுப்பினேன். இயந்திரத் துப்பாக்கி இயக்கவல்ல. எனது மகனை மீட்டுத் தாருங்கள்'' என பள்ளி நிர்வாகத்துக்கும் பிரதமருக்கும் மனுச் செய்திருக்கிறார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் குழுவை உருவாக்கி பின்னின்று அக்குழுவை இயக்கி வருவதாகக் கூறப்படும் பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ. எஸ் ஐ பாகிஸ்த னில் உள்ள இஸ்லாமிய பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பலருக்கு ஆயுதப்பயிற்சியளித்து தலிபானுடன் போராட அவர்களை அனுப்பிவருவதாகக் கூறப்படுகின்றது. (இ- 5)

# அடுத்த மே மாதம் ஹொங்கொங்கில் முதலாவது சட்டமன்றத் தேர்தல்

ஹொங்கொங், ஜூலை 1
ஹொங்கொங்கின் நிர்வாகம் சீனாவிடம் கைமாறிய பின்னர் அதன் முதலாவது சட்டமன்றத் தேர்தல் அடுத்த மே மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் தேர்தல் சீனாவின் இடைக்கால நிர்வாகத்துக்குப் பதிலாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகம் ஒன்றைப் பதவியில் அமர்த்தும்.

தேர்தல் சுதந்திரமானதாக, நியாயமான முறையில் நடத்தப்படும் என்றும்—

அதற்கான ஏற்பாடுகள் இப்போது முதலே தொடங்கிவிட்டன என்றும் ஹொங் கொங்கின் புதிய நிர்வாகி துங்கின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை — அமெரிக்காவின் வெளியுறவுச் செயலாளர் மார்டலின் ஆல்பிறைற் தேர்தல் நடத்தும் சீனாவின் உறுதிமொழி நடைமுறையாகின்றதா என்பதை வாஷிங்டன் கண்காணிக்கும் என்று கூறினார். (இ-5)

# இந்திய அணியில் மீண்டும் அசாருதீன்

இம்மாதம் 14 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகும் நான்கு நாடுகள் பங்கு பற்றும் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பங்கு பற்றும் அணியில் முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் அசாருதீன் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தப்போட்டித் தொடரில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் பங்குபற்றுகின்றன.

இந்தியா தனது முதலாவது போட்டியில் ஜூலை 18 ஆம் திகதியன்று இலங்கை அணியை எதிர்த்தாடும். (இ-10)

# சுதந்திர தினப் பொன்விழா பாரதீய ஜனதா போர்க்கொடி;

இந்திய சுதந்திரதின பொன்விழாக் கொண்டாட்டங்களுக்கு எதிராக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான பி. எல். சர்மா போர்க்கொடி தூக்கி

உலக அரங்கில்

உள்ளார்.

1947 ஒகஸ்ட் 15ஆம் திகதி இந்தியா — பாகிஸ்தான் என இந்தியா இரண்டாகத் துண்டாடப்பட்ட நாள்: இலட்சக்கணக்கான மக்கள் இருதரப்பிலும் படுகொலை செய்யப்பட்ட நாள்; இந்தியப்பிரிவினையின் பொன் விழா ஆண்டு என வேண்டுமென்றால் சொல்லலாமே தவிர இந்திய சுதந்திரதின பொன்விழா எனக் கூற முடியாது என்றார் அவர்.

எனவே, சுதந்திர பொன் விழாக் கொண்டாட்டங்களைத் தடைசெய்யப்போவதாகக் கோரி நீதிமன்றத்தை அணுகப் போவதாக அவர் பத்திரிகைச் செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

# எரிமலைவெடிப்பு

கரீபியன் தீவில் மன்சாரத்தில் உள்ள எரிமலையில் இருந்து கடந்த நான்கு தினங்களாக நெருப்புக் குழம்பும், சாம்பலும் வெளியேறி வருகிறது.

இந்த எரிமலை வெடிப்பில் சிக்கி 10 பேர் உயிரிழந்துவிட்டனர்: 12 பேர் காணாமற் போயினர்.

எரிமலைச் சாம்பலினால் மூன்று கிராமங்கள் முற்றாக மூடப்பட்டன. (ஐ)

# இந்த வருடத்தில் மிகக் கூடிய நேரத்தையுடைய நாள் நேற்று!

இந்த வருடத்திலேயே மிக அதிகமான நேரத்தினையுடைய நாள் நேற்று ஆகும்.

மற்றைய நாள்களை விட 1 விநாடி நேற்று அதிகம் இந்தக் காலநீடிப்பு, பூமியின் சுழற்சியில் ஆண்டுதோறும் அதிகரித்து வரும் வேகத்தின் காரணமாக ஏற்படுகின்றது.

பூமியின் சுழற்சி வேகத்தினை தடைசெய்ய முடியாது என்ற காரணத்தினால் காலத்தினை மிகத்துல்லியமாகக் கண்காணிக்கும் உலக கடிகாரத்தின் வேகம் ஒரு விநாடியால் சரிசெய்து கொள்ளப்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (இ-5)

# நிலச்சரிவுக்கு 35 பேர் பலி

காராச்சி, ஜூலை 1
பாகிஸ்தானின் மன்சேஹா மாவட்டத்தில் நிகழ்ந்த நிலச்சரிவில் 35 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பல வீடுகள் மண்ணுக்குள் புதைந்துள்ளன.

பெரும் மழை புயல் காரணமாக இந்த நிலச்சரி ஏற்பட்டுள்ளது. (இ-5)

# மாணவரின் கல்வித்தர வீழ்ச்சிக்கு ஆசிரியரும் பொறுப்பேற்க வேண்டும்

## 'ராவய' ஆசிரியர் தலையங்கம்

**கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் 13 ஆயிரத்து 275பேரும் ஆங்கிலப் பாடத்தில் 6 ஆயிரத்து 929பேரும் ஒரு புள்ளியை யாவது பெறவில்லை; இந்நிலைக்கு மாணவர்கள் மாத்திரம் காரணமில்லை ஆசிரியர்களும் காரணம் என்கிறது ''ராவய'' சிங்கள வார இதழ். இது தொடர்பாக ராவய வில் வந்த ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:**

கடந்த மாதம் டிசம்பர் நடைபெற்ற ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்துக்குத் தோற்றிய மாணவர்களில் 13ஆயிரத்து 275 பேர் அப்பாடத்தில் ஒரு புள்ளியையயாவது பெறவில்லை என பரீட்சை ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பரீட்சைக்குத் தோற்றியவர்களில் இவர்கள் மூன்று சதவீதமானவர்கள் ஆவர்.

ஆங்கிலப் பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளிலும் 6 ஆயிரத்து 929 பேர் அப்பாடத்தில் ஒரு புள்ளியை யாவது பெறவில்லை. ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றியோரில் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையானோர் அப்பாடங்களில் சித்தி அடையவில்லை.

கணிதம் மற்றும் மொழி உட்பட ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் 22.3 சதவீதமானோர் அல்லது தோற்றிய 4 லட்சத்து 92 ஆயிரத்து 422 பேரில் 1 லட்சத்து 9 ஆயிரத்து 885 பேர் மாத்திரமே சித்தியடைந்துள்ளனர்.

இந் நிலைமை மிகவும் பயங்கரமானது. சிறந்த பெறுபேறுகளைப் பெறுவோர் குறித்தே நாம் அக்கறை கொள்கின்றோம். ஆனால் பரீட்சைகளில் சித்தியடையாதோர் குறித்து கவனம் செலுத்துவதில்லை.

கணிதப் பாடத்துக்குத் தோற்றியோரில் 3 சதவீதமானோருக்கு ஒரு வினாவுக்குக் கூட சரியான பதில் அளிக்க முடியவில்லை என்றால் அந்த நிலைமைக்கு மாணவர்கள் மாத்திரமன்றி குறிப்பிடத்தக்களவு பரந்த அளவில் ஆசிரியர்களும் பொறுப்பேற்க வேண்டும்.

மாணவர்களின் கல்வித் தரத்தைப் போலவே ஆசிரியர்களின் குண இயல்புகளின் தரமும் வேகமாகச் சரிந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

கல்வித் தகைமைகளைக் கவனிக்காது குறைந்த கல்வித் தரத்தைக் கொண்டவர்களை ஆசிரிய சேவைக்குள் சேர்த்ததும் இந் நிலைக்கு ஒரு காரணமாகும்.

மறுபுறத்தில் ஆசிரியர்களாக ஆசிரிய சேவையில் சேர்க்கப்பட்டோருக்கு அவர்களது அறிவை வளர்த்துக் கொள்ளுவதற்கான ஏற்பாடுகள் எவையும் மேற்கொள்ளப்படுவதில்லை. சில மாவட்டங்களில் ஆசிரியர்கள் தேவைக்கு மிஞ்சியும் மற்றும் சில மாவட்டங்களில் ஆசிரியர்கள் பற்றாக் குறையும் நிலவுகிறது.

ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ள மாவட்டங்களிலிருந்து ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் மாவட்டங்களுக்கு ஆசிரியர்களை மாற்றும் நடைமுறையும் செயற்படுத்தப்படுவதில்லை.

பாடசாலைக் கல்வியில் ''ரியூசன்'' என்பது அத்தியாவசியமான ஒன்றாகிவிட்டது. இதற்குக் காரணம் பாடசாலையிலிருந்து கிடைக்கும் கல்வி போதுமானதாக இல்லாதிருப்பதே ஆகும்.

ஆசிரியர்களின் தரத்தை முன்னேற்ற வேண்டுமாயின், மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை அவர்களைப் பரீட்சைகளுக்குத் தோற்றச் செய்து அதன் மூலம் அவர்களின் கல்வி அறிவை வளர்க்கும் ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

பாடசாலை முறைகள் குறைபாடுகளைக் கொண்டதாயிருப்பினும், அதைச் செயற்படுத்துவதில் கஷ்டங்கள் தோன்றினும் அதை மாற்றி அமைப்பதற்கு எவரும் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை.

மாணவர்களின் விருப்பத் தெரிவுக்குப் போதுமான பாடங்கள் இல்லாதிருப்பதும் மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையாததற்கு ஒரு காரணமாகும். விருப்பத் தெரிவுக்குரிய பாடங்கள் போதுமானவையாக இல்லாத போது தாம் விரும்பாத ஒரு பாடத்தைக் கட்டாயத்தின் பேரில் கற்க வேண்டிய ஒரு சூழ்நிலைக்கு மாணவர்கள் தள்ளப்படுகின்றனர்.

கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி ஒரு குழுவை நியமித்துள்ள போதிலும் அவர்கள் எதனை மேற்கொள்ளவுள்ளனர் என்பது தெளிவில்லை. மேற்கொள்ளவுள்ள பணிகள் குறித்து இன்னும் வெள்ளை அறிக்கை கூடத் தயாரிக்கப்படவில்லை.

கல்வியில் பயன்தரத்தக்க சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமேயானால் முதலில் பயன்தரு கருத்துப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் உயர்மட்ட அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொள்ள வேண்டும்

இவ்வாறான கலந்துரையாடல்கள் மூலமாகவே கல்விச் சீர்திருத்தம் தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்,

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐந்து அரசியல்வாதிகளுக்கு 'பரா' அமைப்புடன் தொடர்பு

## இருவர் முன்னாள் அமைச்சர்களாம்

கொழும்பு, ஜூலை 1

''பரா'' அமைப்புடன் இரு முன்னாள் அமைச்சர்கள் உட்பட 5 அரசியல்வாதிகள் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்று இரகசியப் பொலீஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த 5அரசியல் வாதிகளில் ஒருவர் இப்போதும் பதவியில் உள்ளார் என்றும்—

குருநாகல் இராணுவ முகாம் ஒன்றில் இருந்து இந்தக் குழுவினர் ஆயுதங்களை எடுப்பதற்கு உயர் அதிகாரி ஒருவர் உதவியிருக்கிறார் என்றும் — பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த அமைப்பைச் சேர்ந்த ஐந்து பேரை ஏற்கனவே கைது செய்து விசாரித்ததில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன என்றும்—

இந்த அமைப்பின் தலைவர் சறத் சில்வா தேடப்பட்டு வருகிறார் என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டது.

88, 89 ஆம் ஆண்டுகளில் தெற்கில் இடம் பெற்ற படுகொலைகளுக்கும் இந்த அமைப்புக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. (இ-3-150)

# குடாநாட்டில் கிராமிய மட்டத்தில் குடி தண்ணீர் விநியோகம்

## ஜேர்மன் நிறுவனம் உதவும்

குடாநாட்டில் கிராமிய மட்டத்தில் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ளும் வகையில் கிராமிய குடிதண்ணீர் திட்டம் ஒன்றை ஜேர்மன் தொழில் நுட்பக் கூட்டுத்தாபனம் நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

ஜேர்மன் தொழில் நுட்பக் கூட்டுத்தாபன ஆலோசகர் ஸ்ரெபன் வேர்த் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கரவெட்டி, அராலி, வாதரவத்தை, சுன்னாகம், ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் முதற்கட்டமாக குடிதண்ணீர் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்,

ஏற்கனவே அப்பகுதிகளில் குடிதண்ணீர் வழங்க அமைக்கப்பட்டிருந்த திட்டங்களை புனரமைக்கவும்—

புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் — திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# காணிப் பங்கீட்டிலும் இனவிகிதாசாரம் தேவை

## தெரிவுக் குழுவில் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 1

கல்வி, தொழில் வாய்ப்பு விடயங்களில் இன விகிதாசாரக் கொள்கையை சடைப்பிடிப்பதாக இருந்தால், காணிப்பங்கீட்டிலும் இன விகிதாசாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஆராய்ந்து வரும் நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்பாகவே அவர் இக் கோரிக்கையை முன்வைத்தார்.

கல்வி, தொழில்வாய்ப்பு விடயங்களில் இனவிகிதாசாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது.

இச் சந்தர்ப்பத்தில் அங்கு உரையாற்றிய ரவி கருணாநாயக்க, காணிப்பங்கீட்டு விடயத்திலும் இனவிகிதாசாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட வேண்டும். வடக்கு - கிழக்கில் தற்சமயம் 28 சதவீதமாக உள்ள காணிகள் இன விகிதாசாரப்படி 12 சதவீதமாக தமிழர்களுக்கு இருக்க வேண்டும் — என்றார்.

இந்தக் கருத்தை தெரிவுக் குழுவில் பலர் எதிர்த்தனர்.

''தெரிவுக் குழுவில் இணக்கம் காணப்பட்ட விடயங்களைக் கொண்டு அரசு விரைவில் அறிக்கை வெளியிடும்'' என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார், (இ-3-150)

# சாவகச்சேரி இந்துவுக்கு காணி

தென்மராட்சி, ஜூலை 1

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கல்லூரி பழைய மாணவர் சங்கம் விளையாட்டுப் பயிற்சிக்கென காணி ஒன்றைக் கொள்வனவு செய்து கல்லூரிக்கு வழங்கவுள்ளது.

பழைய மாணவர் சங்கத்தினால் கரம்போட், சதுரங்கம், பட்மின்டன் ஆகியவை கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்பட்ட வைபவத்தில் சங்க பொதுச் செயலாளர் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் இத்தகவலைத் தெரிவித்தார். (இ-117)

# தரம் குறைந்த தேயிலை

உரும்பிராய், ஜூலை 1

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் தற்போது மீளக் குடியமர்ந்தோர் நிவாரணத்துக்கு வழங்கப்படும்தேயிலை பாவனைக்கு தவாததாக இருப்பதாக முறையிடப்படுகிறது. (இ-154)

# கப்பல்துறை அமைச்சு கதிர்காமருக்கு?

ஜனாதிபதியின் பொறுப்பில் தற்போது உள்ள கப்பல் துறை அமைச்சு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு வழங்கப்படவிருப்பதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை மாற்றங்களின் போது அஷ்ரப்பின் பொறுப்பில் இருந்த கப்பல் துறை அமைச்சு ஜனாதிபதியின் பொறுப்பில் வந்தது.

தற்சமயம்இந்த அமைச்சை லக்ஷ்மன் கதிர்காமரிடம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்தது. (இ - 3 - 150)

# திடீர்த் தேர்தல் நடக்குமா?

## அரசியல் வட்டாரங்களில் பேச்சு

கொழும்பு, ஜூலை 1

நாடாளுமன்றம் 2 வாரத்தில் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுவதாக கொழும்புப்பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தப்படலாம் என்று பேசப்படும் செய்திகளுக்கு இடையில் எதிர் வரும் 10 ஆம் திகதி அவசரகால நீடிப்பு பிரேரணைக்கு சிறிமானி அத்துலத் முதலியின் கட்சி எதிராக வாக்களித்தாலும், அரசு வெல்லும் என்று கூறப்படுகிறது.

தோற்கடிக்கப்பட்டால் அரசு கலைக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் அரசு கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும் என்பது வதந்தியே என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன—

இப்படி அந்த பத்திரிகை மேலும் தெரிவித்தது:

அதே சமயம் தேர்தல் ஒன்று நடக்கும் பட்சத்தில் அதை எதிர்கொள்ள ஐ.தே.க. தயாராவதாக தெரிவிக்கப்பட்டது.

தேர்தலுக்கு முன்னோடியாக ஐ.தே.க. அலுவலகத்தில் தமிழ் மொழியிலும் பணிகள் நடக்க கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்பாடு செய்துள்ளார் என்றும்—

இதற்காக தமிழ் மொழி பெயர்ப்பாளர்களை அவர் தமது அலுவலகத்தில் நியமித்துள்ளார் எனவும்— தெரிவிக்கப்பட்டது.

தேர்தலை எதிர்நோக்கும் தயாரிப்புப் பணிகளில் ஐ.தே.க. ஈடுபட்டுள்ளது என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (இ-3-150)

### சாவகச்சேரியில்

# ரூ. 4 லட்சம் செலவில் மதகுகள் புனரமைப்பு

மழைபெய்யும் காலங்களில் தேங்கி நிற்கும் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கற்குளி, கிராம்புவில், உப்புக்கேணி ஆகிய இடங்களில் வெள்ள நீர் பாயும் விதத்தில் நான்கு இலட்சம் ரூபா செலவில் சாவகச்சேரி நகரசபையால் மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

1997ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியிலிருந்து உப்புக்கேணியில் ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 956ரூபா செலவிலும்—

கிராம்புவிலில் ஒரு இலட்சத்து 75 ஆயிரத்து 751ரூபா செலவிலும்—

கற்குளியில் 67 ஆயிரத்து 395ரூபா செலவிலும்— மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன என்று நகரசபை செயலாளர் சி. நடராசா தெரிவித்தார்.

சாவகச்சேரி சந்தையில் குண்டுவீச்சினால் சேதமடைந்த சந்தைக் கொட்டகை ஒன்றும், கொல்களக் கட்டடமும் விரைவில் புனரமைக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (இ-117)

# கொக்குவிலில் திருட்டுக்கோஷ்டி பிடிபட்டது

கொக்குவில் மேற்குப் பகுதியில் அண்மைக் காலமாக திருட்டுத்தொழிலில் ஈடுபட்டிருந்த திருடர் கோஷ்டி ஒன்று இராணுவத்தினரிடம் சிக்கியது.

கொக்குவில், கோண்டாவில், தாவடிப் பகுதிகளில் மேற்குறிப்பிட்ட திருடர்களின் அட்டகாசம் அதிகரிக்கவே இப்பகுதி மக்கள் இராணுவத்தினருக்கு கொடுத்த தகவலின் பேரிலேயே இவர்கள் பிடிபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் தற்போது மேலதிக விசாரணைக்காக இராணுவத்தினரால் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது. (ஐ - 4)

# அதிபர் சேவை - இடைக்கால சம்பளத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

தற்போது அதிபர் தரம் I, II, III இல் கடமையில் இருக்கும் அதிபர்களை இலங்கை அதிபர் சேவையில் முறையாக உள்வாங்கும் வரை அவர்களுக்கு இடைக்கால சம்பளத் திட்டம் ஒன்றை உடன் வழங்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் எம். டி. டி. பீரிஸ் சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

கல்விச் சேவை தாபனக் கிளையின் 4 - ஈ. எஸ் யு-13 -135 ஆம் இலக்க கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள இந்த புதிய சம்பளத் திட்டம் பொது நிர்வாக அமைச்சின் 02-97 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு பொருத்தமாக அமையும்.

புதிய சம்பளத் திட்டம் பின்வரும் பிரிவுகளுக்கு ஏற்ப அமையும்.

★ அதிபர் தரம் - III — ரீ 16–3
★ அதிபர் தரம் - II — ரீ 16–4
★ அதிபர் தரம் - I — ரீ 16–5

இப்புதிய சம்பளத் திட்டத்தின் கீழ் அதிகரித்த சம்பளத்தில் 40 வீதம் 1 - 1 - 1997 தொடக்கமும், 60 வீதம் 2-1-1998 தொடக்கமும் வழங்கப்படும்.

புதிய சம்பளத் திட்டம் பின்வருமாறு அமையும்:-

### இலங்கை அதிபர் சேவை தரம்: III

| 93-01-01 இல் பெற்ற சம்பளம் | 95-01-01 இல் பெற்ற சம்பன அளவும் தற்போதைய சம்பளமும் | புதிய சம்பளம் |
|---|---|---|
| 37,200 | 57,000 | 72,240 |
| 37,980 | 58,560 | 74,700 |
| 38,760 | 60,120 | 77,160 |
| 39,540 | 61,680 | 79,620 |
| 40,320 | 63,240 | 82,080 |
| 41,520 | 64,800 | 84,540 |
| 42,720 | 66,360 | 87,000 |

| 93-01-01 இல் பெற்ற சம்பளம் | 95 01-01 இல் பெற்ற சம்பன அளவும் தற்போதைய சம்பளமும் | புதிய சம்பளம் |
|---|---|---|
| 43,920 | 67,920 | 89,460 |
| 45,120 | 69,480 | 91,920 |
| 46,320 | 71,040 | 94,380 |
| 47,520 | 72,600 | 96.840 |
| 48,720 | 74,160 | 96,840 |
| 49,920 | 75,220 | 96,840 |
| 51,120 | 77,280 | 96,840 |

### இலங்கை அதிபர் சேவை தரம்: II

| 93-01-01 இல் பெற்ற சம்பளம் | 95 01-01 இல் பெற்ற சம்பன அளவும் தற்போதைய சம்பளமும் | புதிய சம்பளம் |
|---|---|---|
| 42,720 | 80,400 | 90,420 |
| 43,920 | 83,400 | 93,420 |
| 45,120 | 86,400 | 96,420 |
| 46,320 | 89,400 | 99,420 |
| 47,520 | 92,400 | 1,02,420 |
| 48,720 | 95,400 | 1,05,420 |
| 49,920 | 98,400 | 1,08,420 |
| 51,120 | 1,01,400 | 1,11,420 |
| 52,320 | 1,01,400 | 1,11,420 |
| 53,880 | 1,01,400 | 1,11,420 |

### இலங்கை அதிபர் சேவை தரம்: I

| 93-01-01 இல் பெற்ற சம்பளம் | 95 01-01 இல் பெற்ற சம்பன அளவும் தற்போதைய சம்பளமும் | புதிய சம்பளம் |
|---|---|---|
| 45,120 | 86,400 | 1,17,960 |
| 46,320 | 89,400 | 1,23,480 |
| 47,520 | 92,400 | 1,29,000 |
| 48,720 | 95,400 | 1,34,520 |
| 49,920 | 98,400 | 1,40,040 |
| 51,120 | 1,01,400 | 1,45,560 |
| 52,320 | 1,01,400 | 1,51,080 |
| 53,880 | 1,01,400 | 1,56,600 |
| 55,440 | 1,01,400 | 1,62,120 |
| [illegible] | 1,01,400 | 1,67,640 |
| — | — | 1,73,160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மத்தியஸ்தத்திற்கு அரசாங்கம் மறுப்புத் தெரிவிக்கக் காரணங்கள் எவை?

## விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1

தமிழரின் தன்னாட்சிக் கோரிக்கை நியாயமானதென நாகரிக உலகம் அனுதாபம் காட்டலாம் என்ற அச்சமும் இருப்பதாலேயே அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சர்வதேச மத்தியஸ்தத்துக்கு மறுத்து வருவதாக விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் குழு வெளியிட்டுள்ள அந்த அறிக்கையின் சில பகுதிகள் வருமாறு:

1983 ஆம் ஆண்டு ஜூலையில் வெடித்த இனவாதப் பூகம்பத்தில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து தமிழரின் தேசிய இனப்பிரச்சினை சர்வதேச அரங்கில் முக்கியத்துவம் பெற்றது. சிறிலங்காவின் படுபாதகமான மனித உரிமை மீறல்களைக் கண்டு சர்வதேச சமூகம் அதிர்ச்சியடைந்தது.

இந்தக் கொடிய இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்கள், பெரும் எண்ணிக்கையில் மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா ஆஸ்திரேலியா போன்ற பிற தேசங்களில் அரசியல் தஞ்சம் புகுந்தனர். இதனையடுத்து, அபிவிருத்தி அடைந்த செல்வந்த நாடுகளின் அக்கறையும் கவனமும் இலங்கைத் தீவின் அரசியல் மீது திரும்பியது. தமிழரின் நிலைகுறித்துக் கவலையடைந்த மேற்குலக நாடுகள் சில, சிறீலங்காவுக்கு வழங்கும் நிதியுதவியை மனித உரிமைப் பிரச்சினையுடன் தொடர்புபடுத்தி, மனித உரிமையை மேம்பாடு செய்வதன் அடிப்படையில் உதவி வழங்கப்படுமென வலியுறுத்தி வந்தன.

ஆயினும், மேற்குலகின் இந்த அழுத்தங்கள் எவ்வித பயனையும் அளிக்கவில்லை. சிறீலங்காவின் ஒடுக்குமுறை ஆட்சியில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாத போதிலும் தற்போதைய சிங்கள அரசாங்கம், சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நோக்குடன் விசாரணைக் குழுக்களையும் மனித உரிமை ஆணைக்குழுக்களையும் நியமித்து சில கண்துடைப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

ஆனால் இலங்கைத் தீவானது தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தின் கீழும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழும் இராணுவ—பொலீஸ் கொடுங்கோன்மையின் கீழும் ஆளப்பட்டு வருகின்றது என்பதுதான் உண்மை.

தென்னிலங்கையில் அரசுக்கு எதிரான சக்திகள் காவல்துறையினரின் பயமுறுத்தல், கைது, தடுப்புக் காவல், தாக்குதல் போன்ற கொடுமைகளை சந்தித்து வருகின்றன. அங்கு அரசியல் சுதந்திரங்களை நசுக்கிவிட அரசாங்கம் இரும்புக் கரத்தைப் பாவிக்கிறது.

### திறந்த வெளிச் சிறைகள்

வடக்கு-கிழக்கில் நிலைமை படுமோசமாக உள்ளது. இங்கு இராணுவ நடவடிக்கைகள் என்ற போர்வையில் தமிழருக்கு எதிராக மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறல்களும், போர்க் குற்றங்களும் இழைக்கப்படுகின்றன.

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் திறந்த வெளிச் சிறைச்சாலைகளாக மற்றப்பட்டு கைதிகளும் காவல்வைப்பும், காணாமல் போதலும், சித்திரவதையும், பாலியல் வல்லுறவும், கொலைகளுமாக இராணுவப் பயங்கரவாத ஆட்சி நடைபெறுகிறது. யாழ்ப்பாணத்தில் மட்டும் 500 பேருக்கு மேல் காணாமல் போயுள்ளதாக நன்கு ஆவணப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனித உரிமை நிலைமை படுமோசமாகி, போரும், வன்முறையும், அடக்குமுறையுமாக இலங்கையில் கொந்தளிப்பான நிலை தாண்டவமாடும்போது, உதவி வழங்கும் நாடுகள் தொடர்ந்தும் சிறிலங்காவுக்கு பாரிய அளவில் நிதியுதவியை வாரி வழங்கிவருகின்றன.

இந்த நிதியில் பெரும்பகுதி அரசாங்கத்தின் "சமாதானத்துக்கான போருக்கு" செலவாகிவருகிறது மனித உரிமையோடு நிதியுதவியைத் தொடர்புபடுத்திய செல்வந்த நாடுகள், அந்த அழுத்தத்தைப் பிரயோகிக்கத் தயக்கம் காட்டுவதால், அது சந்திரிகா அரசாங்கத்துக்கு ஊக்கத்தை அளித்திருப்பதுடன் அவரது ஒடுக்குமுறை ஆட்சியை நீடிக்கவும் வழிகோலியுள்ளது.

இது ஒரு புறமிருக்க, போரினால் எழுந்த மாபெரும் மனித அவலங்களைக் கருத்தில் எடுக்காது, மனிதாபிமான உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது, சில வெளிநாடுகள் சிறிலங்காவுக்கு தொடர்ந்தும் அழிவு ஆயுதங்களை வழங்கி வருகின்றன.

உலகத்திடமிருந்து பெருந்தொகையில் நிதியுதவியும், பெருமளவில் ஆயுத உதவியும் குவிந்து வருவதால் உற்சாகம் பெற்றிருக்கும் அரசு, தமிழருக்கு எதிராக ஈவிரக்கமற்ற இராணுவ அடக்குமுறைக் கொள்கையை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதே சமயம், போர் விரிவடைந்து தீவிரமாகி தமிழரின் தேசியப்பிரச்சினை மேலும் மோசமாகி வருவதையிட்டுக் கவலைப்படும் வெளிநாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. நெருக்கடியில் பிரதான பாத்திரங்களை வகிக்கும் விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் சமாதானப் பேச்சுக்களை நடத்தி ஓர் அரசியல் தீர்வைக்காண வேண்டுமென, இந்நாடுகள் ஆலோசனை கூறி வருகின்றன.

விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் மத்தியில் பரஸ்பரம் அவநம்பிக்கையும் பகைமையும் இருப்பதால், இருதரப்பினர் மத்தியில் நிகழ்ந்த பேச்சுக்கள் முறிந்து போனதாலும் பேச்சுக்களுக்கு மத்தியத்துவம் வகிக்க அல்லது பேச்சுக்களுக்கு வசதி செய்து கொடுக்க சில நாடுகள் முன்வந்துள்ளன. நோர்வே, சுவீடன், கனடா, சுவிற்சர்லாந்து, ஆஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகள் மத்தியஸ்தத்துக்கு விருப்புத் தெரிவித்துள்ளன. மூன்றாம் தரப்பு சர்வதேச மத்தியத்துவத்தை விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைமை வரவேற்ற போதும் சிறிலங்கா அரசு அதற்கிணங்க மறுக்கிறது; தமிழரின் இனப்பிரச்சினை ஓர் உள்நாட்டு விவகாரம் எனக்கூறி, சர்வதேச மத்தியத்துவத்தை நிராகரித்து வருகிறது.

### சர்வதேச மத்தியத்துவம்

சிறிலங்கா அரசானது சர்வதேச மத்தியத்துவத்தை மறுத்து வருவதற்கு சில அடிப்படையான காரணங்களுண்டு: முதலாவதாக தமிழரின் தேசிய பிரச்சினை உலக அரங்கில் ஏறி, சர்வதேச நெருக்கடிகளில் ஒன்றாகக் கருதப்படுவதை சந்திரிகாவின் அரசு விரும்பவில்லை. இரண்டாவதாக தமிழரின் போராட்டத்தின் பிரதான கதாநாயகனாக விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அந்தஸ்து கிடைப்பதை சிங்கள அரசு விரும்பவில்லை. மூன்றாவதாக, தமிழரின் தன்னாட்சிக் கோரிக்கை நியாயமானதென நாகரிக உலகம் அனுதாபம் காட்டலாம் என்ற அச்சமும் சிறிலங்காவுக்கு உண்டு. நான்காவதாக, சமாதான முயற்சிகளுக்குப் பதிலாக இராணுவப் பாதையையே கொழும்பு அரசு விரும்புகிறது.

### பரஸ்பரம் நம்பிக்கை இன்மை

20 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடரும் ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டமானது சிங்கள அரசுக்கும் புலிகளுக்கும் மத்தியில் பரஸ்பர பகைமையையும் நம்பிக்கையீனத்தையும் உருவாக்கியிருக்கிறது என்பது உண்மை. இரு தரப்பினர் மத்தியில் நிகழ்ந்த பேச்சுக்கள் முறிவடைந்ததற்கு இந்தப் பரஸ்பர பகைமையும் நம்பிக்கையீனமுமே காரணம் இதன் காரணமாகவே, எதிர்காலத்தில் சர்வதேச மத்தியத்துவத்தின் கீழ் பேச்சுக்கள் நடைபெறுவது பயனளிக்குமென விடுதலைப் புலிகள் இயக்கம் நம்புகிறது. ஆனால் சிறிலங்கா அரசு நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டிய காரணங்களின் நிமித்தம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை விரும்பவில்லை. விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு சிங்கள அரசு பின்னடிப்பதற்கு, வேறும் சில காரணங்கள் உண்டு.

சிங்கள ஆட்சியாளரின் பார்வையில் விடுதலைப்புலிகள் ஒரு தீவிரவாத இயக்கம் தமிழரின் தனித்துவம் தாயகம், தேசியம் என்ற தமிழினத்தின் ஒட்டுமொத்தமான விருப்பத்தைக் குறியீடு செய்து நிற்கும் ஒரு புரட்சிகர இயக்கமாக விடுதலைப் புலிகளை இவர்கள் கருதுகிறார்கள். ஏனைய தமிழ்க் குழுக்கள் தமிழ்மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளைக் கைவிட்டு எந்தச் சலுகைகளையும் ஏற்கத் தயாராக இருக்கும் பொழுது விடுதலைப்புலிகள் மட்டும், கொண்ட இலட்சியத்தை இறுகப்பற்றி தமிழரின் தேசிய அபிலாசைகளை வென்றெடுப்பதில் உறுதியாக நிற்கிறார்கள் என்பதையும், சிங்கள ஆளும் வர்க்கம் நன்கு உணர்ந்திருக்கிறது.

ஆகவே, புலிகளுடன் பேசுவதாயின் தமிழர் பிரச்சினையின் அடிப்படைகள் பற்றிப் பேச வேண்டும். ஆனால் இந்த அடிப்படைகள் பற்றி விவாதிக்கக்கூட சிங்கள ஆட்சியாளர்கள் தயாராக இல்லை. தமிழர்களின் தேசிய அபிலாசைகளையும் உணர்வுகளையும் முற்றாக உதாசீனம் செய்து பிறிதொரு அரசியற் கருத்துலகில் தமிழரின் பிரச்சினையை நிலை நிறுத்த முனைகிறார்கள்.

இலங்கையானது பல இனக் குழுக்களைக் கொண்ட ஒரு சமூகக்கட்டமைப்பு என்பதும், அதில் ஒரு சிறிய இனக்குழுவாக தமிழர்கள் அமைந்துள்ளார்கள் என்பதும் இதனடிப்படையில் தேசிய தனித்துவம், தாயகம் என்ற தமிழரின் கோரிக்கைகளை ஏற்க முடியாது என்பதும் ஸ்ரீலங்காவின் நிலைப்பாடு.

இந்த நிலைப்பாடு காரணமாகவே, நேரடியாகவோ அன்றி மூன்றாம் தரப்பு நடுநிலையுடனோ விடுதலைப் புலிகளுடன் ஆக்க பூர்வமான பேச்சுக்களை நடத்த, சிங்கள ஆட்சிபீடம் தயக்கம் காட்டுகிறது.

விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக ஓரங்கட்டி விடுவதே அரசின் நோக்கம்

தற்போதைய இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இந்த நோக்கத்தையே சுட்டிக் காட்டுகின்றன. தமிழரின் வரலாற்றுத் தாயகத்தை இராணுவ ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தால் தமிழரின் தாயக, தன்னாட்சிக் கோரிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாம் என்பதும், அதனால் இக் கோரிக்கைகளை முன்னெடுக்கும் புலிகளின் போராட்டத்திற்கும் முடிவுகட்டி விடலாம் என்பதும் அரசின் திட்டமாகும்;

இந்த அந்தரங்க நோக்கங்களின் அடிப்படையிலேயே சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தின் இராணுவ, அரசியல் அணுகுமுறைகள் அமையப் பெற்றுள்ளன. ஆனால் சிறிலங்காவின் பரப்புரை இயந்திரங்கள், உலக சமுதாயத்திற்கு வித்தியாசமான ஒரு கதையை எடுத்துக் கூறுகின்றன. உண்மையான நோக்கங்களை இருட்டடிப்புச் செய்து, பொய்யான புனைகதைகளை எடுத்துக் கூறி வருகின்றன. 'பயங்கரவாத அச்சுறுத்தல்' என்றும், "சமாதானத்திற்கான போர்" என்றும், "புலிகளின் சர்வாதிகார ஆட்சியிலிருந்து தமிழரை விடுதலை செய்வது" என்றும் கற்பனாவாதக் கட்டுக்கதைகளைக் கூறி வருகின்றன. சிறிலங்கா அரசின் இந்தப் பொய்ப் பிரசாரங்களை நம்பி ஏமாந்து போகாமல், சுதந்திரத்திற்காகவும் கௌரவத்திற்காகவும் தமிழர் நடத்தி வரும் நியாயமான போராட்டத்தின் உண்மைக் கதையை உலக சமூகம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே எமது ஆவல்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## செய்திச் சாரம்

### வெளியீட்டு விழா

சுழிபுரம், ஜூலை 1

சுழிபுரம் - பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணியர் "பிள்ளைத் தமிழ்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பறாளை ஆலய மண்டபத்தில் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் வே. நாகராசா தலைமையில் நடைபெறும்.

(இ-28)

### சனசமூக நிலையம்

கொழும்புத்துறை, ஜூலை 1

தொல்புரம் விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் யுத்த கால அனர்த்தங்களின் பின் புனரமைக்கப்பட்டு நிலையத் தலைவர் தி. உதயசூரியன் தலைமையில் செயற்பட்டு வருகிறது. நிலைய வாசிகசாலையும் தற்போது இயங்குகிறது. (இ-30)

### சுத்திகரிக்கப்படாத வடிகால்கள்

குருநகர், ஜூலை 1

குருநகர் றெக்கிளமேசன் பகுதியில் உள்ள வடிகால்கள் யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பகுதியினரால் நாளாந்தம் ஒழுங்காகச் சுத்திகரிக்கப்படுவதில்லை என இங்குள்ள பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள்.

வடிகால்களில் துர்நீரும், அழுக்குகளும் தேங்கியுள்ளதனால் கொசு, இலையான், நுளம்பு ஆகியவை பெருகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

### சம்பளம் இல்லை

கொழும்புத்துறை, ஜூலை 1

யாழ். கைதடி அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை ஊழியர்களுக்கு கடந்த மே, ஜூன் மாதங்களுக்கான சம்பளம் வழங்கப்படவில்லை. (இ-30)

### விஞ்ஞான தின விழா

யாழ்ப்பாணம், ஜூலை 1

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் விஞ்ஞான விழா கடந்த வியாழக்கிழமை விஞ்ஞானக் கண் காட்சியுடன் சிறப்பாக நடை பெற்றது. யாழ். பல்கலைக்கழக பௌதிகத்துறைத் தலைவர் பேராசிரியர் க. கந்தசாமி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

(இ)

### பதவியேற்பு வைபவம்

வலிகாமம் தெற்கு, ஜூலை 1

சுன்னாகம் றோட்டறிக் கழகத்தினரின் மூன்றாவது பதவியேற்பு வைபவம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

றொட்டேரியன் ரி. வாமதேவன் தலைமையில் நடைபெற உள்ள இக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத் தலைவர் எஸ் சோதிலிங்கம் பிரதம விருந்தினராகவும், அதன் செயலாளர் கே. ஸ்ரீபதி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-152)

### பஸ் நிலையத்தில் முடிச்சு மாறிகள்

தென்மராட்சி, ஜூலை 1

யாழ். பஸ் நிலையத்தில் முடிச்சு மாறிகள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

பஸ்ஸில் முண்டியடித்து ஏறும் பயணிகளின் பிரயாணப் பைகளில் உள்ள பணத்தினை சாதுரியமாக இத் திருடர்கள் எடுத்து விடுகின்றனர்.

கடந்த புதன்கிழமை பகல் ஊர்காவற்றுறை பஸ்ஸில் பயணம் செய்ய ஏறிய பெண் ஒருவரின் பிரயாணப் பையிலிருந்து ரூபா 3 ஆயிரம் "பிக்பொக்கட்" அடிக்கப்பட்டது.

(இ-117)

### மீன்பிடி உபகரணங்கள்

குருநகர், ஜூலை 1

குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள ஐம்பது பேருக்கு சுழற்சி முறையில் ரூபா 20 ஆயிரம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை கடன் அடிப்படையில் வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்தது.

(இ-51)

### ஜி. சீ. ஈ. பரீட்சைக்கு விண்ணப்பம்

வலிகாமம் தெற்கு ஜூலை 1

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைத்திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் இம் மாதம் 15 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(இ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய காது கேட்கும் கருவியும், 26'' TR-389 EM கறுப்பு - வெள்ளை T.V யும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: து. விக்னேஸ்வரன், அச்சுவேலி வல்லை றோட் சைக்கிள் கடை, அச்சுவேலி. (48114)

### விண்ணப்பப் படிவம்

அழகியற் கல்வி பட்டதாரி டிப்ளோமா ஆசிரியர் பதவிக்கான படிவம் விலை ரூபா 2-50. தபாலில் பெறுவதாயின் தபாற்செலவு 3-50சதம் சேர்த்து அனுப்பவும். நாயக பாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (48116)

### தேவை

ரியூசன் வகுப்புகளுக்கு பாவிக்கக் கூடிய பவித்த வாங்கு, மேசை என்பன தேவை. தொடர்பு: தீவகத்தில் ஜீவாசரவணை சின்ன மடுவடி, யாழ். நகரில் T. தனேந்திரன், 83, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி. (48032)

### மணப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சுவிஸில் வேலை செய்யும் 26 வயது அனுஷ நட்சத்திரமுடையவருக்கு மணமகள் தேவை. சாதகக் குறிப்பு. படம் முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும். பொன்ஷரில் பெண் அனுப்பி வைக்கப்படும். இல. 635 C/O உதயன் யாழ்ப்பாணம். (48097)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த இந்தியாவில் வேலை செய்யும் இருபத்தேழு வயதும் விசாக நட்சத்திரமும் உடைய மணமகனுக்கு மணப்பெண் தேவை. சாதகக் குறிப்பு: படம் மற்றும் முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும். இல. 634, C/O உதயன் யாழ்ப்பாணம். (48098)

### தவறிவிட்டது

வெளிநாட்டில் எடுத்த முக்கிய படங்களுடன் அல்பம் ஒன்று 25-6-97 அன்று கல்வியங்காட்டு சந்திக்கும், நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ''சர்மிளா போட்டோ'' பருத்தித்துறை வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும். (48102)

கனகரத்தினம் திருவரங்கன் ஆகிய எனது 040235 இலக்க பாஸ் 25-06-97 (புதன்கிழமை) நெல்லியடி மத்திய வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். க. திருவரங்கன், அம்மையா வளவு, அல்வாய் மேற்கு, திக்கம். (48115)

### நாடகம் எழுதுவது எப்படி?

சஞ்சீவியில் 'எரிகிற வீட்டில்' சிறுகதை வாசித்தீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் ''நூல்கள் அக்கரைச் சீமையில்'' நாவல் ரூபா 25, நாடகம் எழுதுவது எப்படி? கட்டுரைகள் ரூபா 50. (47934)


அதிகாரப் பரவலாக்கல் யோசனை:

# அரச எம்.பிக்கள் அபிப்பிராயத்தை திரட்டுவதில் அரசாங்கம் ஆர்வம்

## 14 ஆம், 15 ஆம திகதிகளில் கருத்தரங்கு

கொழும்பு, ஜூலை 1

அரசாங்கம் முன் வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனை குறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் அபிப்பிராயம் பெறும் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் நடைபெற விருக்கின்றது.

கொழும்பு டொல்பின் ஹோட்டலில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

அமைச்சர்கள் இரத்தின சிறி விக்கிரமநாயக்க, லக்ஷ்மன் ஜெயக்கொடி, இந்திகா குணவர்த்தன, பேர்னாட் சொய்ஸா எஸ்.டி. திஸநாயக்க, லக்ஷ்மன் கதிர்காமர், அஷ்ரப் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்குவர்.

இக்கருத்தரங்கில் 10 விடயங்கள் கருப்பொருளாக இருக்கும்.

அந்தக் கருப்பொருள்கள் வருமாறு:-

★ 13 ஆவது திருத்தம் இருக்கும் போது அதிகாரப் பரவலாக்கல் தீர்வு தேவையா?

★ பிராந்திய சபைகளுக்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டால் நாடு பிரியுமா?

★ அதிகாரப்பரவலாக்கல் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுமா?

★ அதிகாரப்பரவலக்கல் ஜனநாயகத்தைப் பலம் பெறச் செய்யுமா?

★ விடுதலைப்புலிகளுக்கு முன்னால் அரசியல் தீர்வுத் திட்டத்தின் எதிர்காலம் எப்படி?

★ பிராந்திய சபைகளுக்கு பொலீஸ் அதிகாரம் கையளிப்பதால் நன்மை உண்டா?

★ பிராந்திய சபைகளுக்கு அரச காணிகளை அளிப்பதால் நன்மை உண்டா?

★ தீர்வுத்திட்டத்தில் பொதுசனத் தொடர்பு சாதனத்தின் பங்கு?

★ யுத்தத்தில் வெற்றியீட்டிய பின்னர் அதிகாரப் பரவலாக்கல் தேவைதானா?

★ அதிகாரப்பரவலாக்கல் விடயத்தில் எதிர்பார்த்த வெற்றியைப் பெறுவது எப்படி? (இ-3)


## விற்பனைக்கு

''றெட்பானா யாழ்ப்பாண திட்டத்திற்குச் சொந்தமான DIHATSU இனத்தைச் சேர்ந்த ஜீப் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கு உண்டு. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: 04-07-1997 ஆகும். விற்பனைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் உடனடியாக பணத்தைச் செலுத்தி வாகனத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். வாகனத்தை காரியாலய நாள்களில் 9.00—4.00 மணி வரை பார்வையிடலாம்.''

திட்ட இணைப்பாளர்,
றெட்பானா,
இல: 15, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(48113)

## யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்

யாழ். உ. ம. சங்க புதிய மத்தியஸ்தர்களுக்கான வகுப்புக்கள் 06-07-97 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு 61, ஈச்சமோட்டை வீதியில் உள்ள பணிமனையில் ஆரம்பமாகின்றன.

பங்கு பற்ற விரும்புவோர் நேரில் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கப்ரின் D. A. M. குணசிங்கம்
(தலைவர்)

(48106)

## வாழ்த்தும் வரவேற்பும்

உடுவில் கல்விக் கோட்டத்தின் கோட்ட கல்விப் பணிப்பாளர் பதவியை அணிசெய்யவுள்ள

''ஸ்கந்தவரோதயன்''

### திரு. அ. தற்பரானந்தன்

அவர்களை

வாழ்த்தி வரவேற்கின்றோம்.

தங்கள் ஆழ்ந்த அறிவும், நீண்ட அநுபவமும், உயர்ந்த சிந்தையும், பரந்த உள்ளமும், ஆர்வமும், ஆற்றலும், எளிமையும், பணிவும், உறுதியும் துணிவும் கல்விச் சுடரைக் கருத்துடன் தூண்டி காலமெல்லாம் கவினொளி பாய்ச்ச வழி வகுக்கும் என நம்புகின்றோம்.

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை,
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி,
கல்விச் சமூகம்.

கந்தரோடை,
சுன்னாகம்.
01. 07. 97

(சி/1040)


## புதிய அதிபர்கள்

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அதிபர் ச. கைலாசநாதன் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபராக கல்வித் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்துக்கு மல்லாகம் மகா வித்தியலயத்தில் உப அதிபராக கடமையாற்றும் எஸ். நாகேந்திரசிவன் புதிய அதிபராக நியமிக்கப் பட்டுள்ளார்.

# ஜெய்ப்பூர் கால் பொருத்திய மாணவர்களுக்கு உதவி

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பாவனையாளர்களுக்கு சுய தொழில் வாய்ப்புக் கடனுதவிகளை யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. அத்துடன் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தில் செயற்கைக் கால்களைப் பொருத்திய பாடசாலை செல்லும் மாணவர்களது கல்விக்கு உதவும் திட்டம் ஒன்றையும் இந்த நிறுவனம் செயற்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தினை விரிவுபடுத்துமுகமாக மேற்படி ஜெய்ப்பூர் கால் பாவனையாளர்கள் தங்கள் நிரந்தர முகவரியை அனுப்பி வைக்குமாறு யாழ். ஜெய்ப்பூர் நிர்வாகம் கேட்டுள்ளது. (ஐ)

களப்பலியான

# மேலும் 43 பேரின் விவரம் அறிவிப்பு

வவுனியா, ஜூலை 1

பெரியமடுப் பகுதியில் கடந்த புதன்கிழமை நடத்திய தாக்குதலில் களப்பலியான மேலும் 43 பேரின் விவரங்களை நேற்று விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர் என்று ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

இத்தாக்குதலில் களப்பலியான 50 பேரின் விவரங்களை ஏற்கனவே புலிகள் வெளியிட்டிருந்தனர்.

இத்தாக்குதலில் மொத்தம் 93 பேர் களப்பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது. 86 பேர் களப்பலியானதாக முன்னர் புலிகள் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3-164)

# மீசாலைப் பகுதிக்கு விரைவில் மின்சாரம்

மீசாலை புத்தூர்ச் சந்திப் பகுதி மிக விரைவில் மின்சார விநியோகத்தைப் பெறவுள்ளது.

இதற்கான துரித நடவடிக்கையில் இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகம் ஈடுபட்டுள்ளது.

இப்பகுதிக்கான மின் விநியோகத்தை வழங்குவதற்காக ஜெனரேட்டர் ஒன்று ஏற்கனவே கொடிகாமத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த ஜெனரேட்டர் மூலம் ஆரம்ப கட்டமாக கொடிகாமத்துக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. பின்னர் கொடிகாமத்துக்கான மின் விநியோகம் மிருசுவில் அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள ஜெனரேட்டர் மூலம் வழங்கப்பட்டதை அடுத்து இந்த ஜெனரேட்டர் மின்சார விநியோகத்தை வழங்காது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது அது மீண்டும் இயக்கப்பட்டு மின் வழங்கப்படவுள்ளது.

இந்நடவடிக்கைக்காக முன்னர் சேதமுற்றும், காணாமற் போயுமிருந்த மின் தூண்கள் மின் மார்க்கக் கம்பிகள் தற்போது இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்தால் செப்பனிடப்பட்டு வருவதாக சாவகச்சேரி இலங்கை மின்சார சபை மின் அத்தியட்சகர் எஸ். சடாச்சரமூர்த்தி தெரிவித்தார். (இ-31)

# புளொட்டின் வீர மக்கள் தினம் குடாநாட்டிலும் அனுஷ்டிக்கப்படும்

யாழ்ப்பாணம். ஜூலை1

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரால் (புளொட்) வருடாந்தம் அனுஷ்டிக்கப்படும் ''வீரமக்கள் தினம்'' எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம், முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் நினைவு தினமான எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகும் வீரமக்கள் தினம் புளொட் இயக்கத்தின் ஸ்தாபகரும், செயலதிபரும் தளபதியுமான க. உமாமகேஸ்வரனின் நினைவு நாளான 16 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படும்.

தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் மரணித்த அனைத்து அமைப்புகள், கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள், தளபதிகள், போராளிகள், பொதுமக்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து கடந்த காலங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த வீரமக்கள் தினம் இம்முறை முதன்முறையாக குடாநாட்டிலும் இடம்பெற விருப்பதாக புளொட் அமைப்பினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீரமக்கள் தினத்தில் குடாநாட்டில் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

★ 13 ஆம் திகதி - இரத்த தான வைபவம்.

★ 14 ஆம் திகதி - பருத்தித்துறை பஸ் நிலையத்தில் பயணிகள் தரிப்பிடம் திறந்து வைத்தல், பொதுக் கூட்டம்.

★ 15 ஆம் திகதி - சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நோயாளர் பாவனைக்கு தண்ணீர்தாங்கி அமைத்தல், நினைவுப் பொதுக் கூட்டம்.

★ 16 ஆம் திகதி - யாழ். மத்திய பஸ் நிலையத்தில் பயணிகள் நலன் கருதி தரிப்பிடம் நிர்மாணித்து திறந்து வைத்தல். நூல் நிலையத்திற்கு நூல்கள் அன்பளிப்பாக வழங்கல், நினைவுப் பொதுக் கூட்டம். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சமிக்ஞைகள் நல்லவை அல்ல!

அதிகாரப் பரவலாக்கல் திட்டம் குறித்து ஆராய்வதற்காகத் தமிழ்க் கட்சிகள் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் கூடியிருந்தன. ஆயினும் தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்காமலே அந்த ஏழு கட்சிக் கூட்டம் கலைந்தது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் செயற்பாட்டில் இரண்டு விடயங்கள் நிறைவு செய்யப்பட்டால் மட்டுமே அதனை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்ல முடியும்:

தமிழ் மக்களுக்குத் தான் வழங்கப்போகும் உரிமைகள் எவை எவை, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான தனது வழிமுறைகள் என்னென்ன என்ற விவரங்களை அரசு முன் வைக்க வேண்டும்.

அதே போலத் தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய உரிமைகள் எவை, அந்த உரிமைகளை அவர்கள் அனுபவிக்கத் தேவையான நிர்வாக மற்றும் கட்டமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதனைத் தமிழர் தரப்பு முன்வைக்க வேண்டும்.

இவையிரண்டும் அவரவர் கையில் இருந்தால் மட்டுமே அவற்றில் திருத்தங்கள், மாற்றங்கள், செப்பனிடுதல்கள் செய்து இரண்டுக்கும் சார்புடைய ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு அரசும், தமிழ்க் கட்சிகளும் மேற்கொண்டு முயற்சிக்கலாம்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அரச தரப்பும் தான் வழங்கப்போவது என்ன என்று திட்டவட்டமாகச் சொல்லவில்லை — சொல்லக் கூடிய நிலையில் இன்னும் இல்லை. தமிழர் தரப்பும் என்ன வேண்டும் என்று சொல்லக் கூடிய நிலையில் இன்னும் இல்லை. முடிவு எதையும் முடிவு செய்ய முடியாமல் முரண்பட்டு நிற்கிறது.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கூறியது போல, விடுதலைப் புலிகளின் பங்கில்லாமல் எந்தத் தீர்வையும் காணமுடியாது என்ற யதார்த்தம் ஒரு புறம்.

ஆனால் அதற்கு முன்னர் அரச தரப்பும் (சிங்களக் கட்சிகள் தரப்பும்) தமிழ்க்கட்சிகள் தரப்பும் தத்தமக்குள்ளேயே ஒரு முடிவுக்கு வரமுடியாமல் திக்குமுக்காடுவது நல்ல சமிக்ஞைகள் அல்ல.

தமிழ் அரசியல் கட்சிகள் தமக்குள் ஒரு தீர்மானத்துக்கு வராமல் பிடுங்குப்படுவது தீர்வு யோசனைக்கு இறுதி வடிவம் காண்பதனைக் காலதாமதப்படுத்த அரசுக்கு ஒரு காரணமாகி விடும், நொண்டிக் குதிரைக்குச் சறுக்குவது நல்ல சாட்டல்லவா...!

தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் இது விடயத்தில் ஒத்த கருத்துக்கு, தமிழ் மக்களின் இழந்த உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய ஏகோபித்த முடிவுக்கு வர இயலாமல் திண்டாடுவது, இழுபறிப்படுவது தீர்வு ஒன்று கிடைக்கும் என்ற அற்ப சொற்ப நம்பிக்கையையும் வேரோடு சாய்க்கிறதே!

தமிழர்களின் இன்றைய நிலைக்கு அவர்களின் மத்தியில் நிலவும் ஒற்றுமை இன்மையே காரணம் என்பது அரசியல் வரலாறு. அவர்கள் தமது உரிமைக் கோஷத்தை எக்காலத்திலும் ஒரே குரலில் ஒலிக்கமாட்டார்கள் என்பது நிரந்தர நியதியானால் தமிழ்ச் சாதிக்கு விடிவு ஏது?

# அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தீர்வுத் திட்டத்தை முதலில் அமுல் செய்யுங்கள்

## அரசுக்கு வாசுதேவ யோசனை

திருகோணமலை, ஜூலை 1

''அரசாங்கம் முதலில் யுத்தத்தை நிறுத்த வேண்டும். அதன்பின் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அதிகாரப் பரவலாக்கல் யோசனையை அமுல் செய்ய வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களுக்கு அரசு மீது நம்பிக்கை ஏற்படும்.''

இரத்தினபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்:

திருகோணமலை றோட்டறிக் கழகம் நேற்று முன்தினம் மாலை ஏற்பாடு செய்திருந்த சமாதான அரங்கு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

எலிபன் மண்டபத்தில் நடந்த இந் நிகழ்வுக்கு றோட்டறிக் கழகத் தலைவர் டாக்டர் ஞானகுணாளன் தலைமை வகித்தார்.

வாசுதேவ தனது உரையில் மேலும் கூறியதாவது:-

நாட்டின் அதிகார வர்க்கம் சிங்கள மயம். இராணுவமும் சிங்கள மயமாகவிருக்கிறது.

இந்த இனவாத அமைப்புக்கள் முற்றாகப் புனரமைக்கப்படும் வரை அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை நிறைவேற்ற முடியாது.

பண்டா—செல்வா, டட்லி—செல்வா, இந்திய—இலங்கை ஒப்பந்தங்கள் உருவானபோது தமிழ்த் தலைவர்கள் புரிந்துணர்வுடன் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் செயல்பட்டதால் தான் அந்த ஒப்பந்தங்களை நிறைவேற்ற முடிந்தது. ஆனால் அவை நடைமுறைக்கு வராமைக்கும் காரணம் சிங்கள மக்களின் ஆதரவின்மையும், எதிர்ப்பும்தான்.

இன்று நிலைமை மாறி வருகிறது. அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற மனநிலை சிங்கள மக்கள் மனதில் உருவாகி வருகிறது யுத்தத்தின் சுமையை அவர்கள் உணரத் தொடங்கியுள்ளனர்; யுத்தத்தில் இறப்பது அவர்களின் பிள்ளைகளே என்பதால் இந்த நிலை ஏற்பட்டு வருகிறது: இந்த சந்தர்பத்தை அரசாங்கம் தவற விடக் கூடாது.

இராணுவத்தின் சிந்தனை வேறு. அரசாங்கத்தின் சிந்தனை வேறு. ஆனாலும் அரசாங்கம் இராணுவத்தின் யுத்த சிந்தனைக்குள் சிக்கியுள்ளது. தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற அரசாங்கம் முன்வர வேண்டும்.

அரசு யுத்தத்தை உடன் நிறுத்த வேண்டும். அரசாங்கம் யுத்தத்தை முன் எடுத்துச் செல்ல புலிகள் தற்பாதுகாப்பு யுத்தத்தில் ஈடுபடுகின்றார்கள்.

இந்த நிலையை விட்டு, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் சிறிய அளவில் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை அமுல் செய்ய முன்வர வேண்டும். அரசு மீது தமிழ்மக்கள் கொண்டுள்ள சந்தேகம் அப்போதுதான் நீங்கும்.

இராணுவ ரீதியில் தமிழர் பிரச்சினையைத்தீர்க்க அரசு முயன்றதால் தான் உள்ளூராட்சித் தேர்தலின் போது தமிழ் மக்கள் அரசுக்கு எதிராக வாக்களித்தனர்.

நான் அரசாங்கம் நடத்துபவனாக இருந்தால் இப்படி யுத்தத்தை நடத்த மாட்டேன். பிரபாகரன் தாக்கினாலும் நான் தற்பாதுகாப்பு நடவடிக்கையைத்தான் எடுப்பேன்—என்றார்.

(ஐ-150-3)

## சமய சந்நிதிகளில்

கைதடி இந்து மன்ற இளம் சிறார்களின் பஜனைப் பாடல்கள் நிகழ்ச்சி இன்று செவ்வாய் காலை 9 30 மணி முதல் மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும்.

(ஐ-117)

★ ★ ★

யாழ். வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவ சப்பறத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறும்.

நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து தேர்த்திருவிழாவும் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் (இ-30)

★ ★ ★

யாழ். வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஏகாதசி உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.15 மணிக்கு விசேட அபிஷேக, பூஜை ஆராதனையுடன் நடைபெறும்.

(இ-30)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ''வைஷ்ணவ ஏகாதசி'' விசேட அபிஷேகம், பூசை ஆராதனை, வழிபாடுகள் நடைபெறும். சுவாமி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

(இ-30)

★ ★ ★

மடுத் திருப்பதி விழா நாளை புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

திருப்பலி ஒப்புக்கொடுத்தலும், நற்சிந்தனை, ஆராதனை, வழிபாடுகளும் இடம் பெறும். (இ-30)

★ ★ ★

யாழ். வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய மஹா சங்காபிஷேகமும், உற்சவமும் நாளை புதன்கிழமை காலை 7.30 மணியளவில் ஆரம்பமாகும். ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீவேங்கடேசப் பெருமானுக்கு நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு ஸ்நபனா அபிஷேகமும் நடைபெறும்.

மாலை 3.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து சுவாமி வெளி வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார் (இ-30)

★ ★ ★

கொக்குவில் அருள்மிகு மாத்தனை ஸ்ரீ கந்தசுவாமி கோயில் 2 ஆம் திருவிழாவான ''கார்த்திகைத் திருவிழா'' இன்று செவ்வாய் மாலை 4.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை, ஆராதனை, வழிபாடுகளை அடுத்து இடம் பெறும். (இ-30)

★ ★ ★

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோயிலின் வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

இதேவேளை எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு புதிய சித்திரத் தேர்களின் வெள்ளோட்ட விழாவும் இடம்பெறும்.

(இ-4)

★ ★ ★

மடுமாதா தேவாலய உற்சவத்திற்கு செல்ல முடியாத யாத்திரிகளுக்காக மடுமாதா தேவாலய உற்சவ இறுதி நாள் நிகழ்வுகள் இன்றும் நாளையும் கொடிகாமம் கச்சாய் புனித இராயப்பர் தேவாலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

இன்று மாலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலிப் பூஜையும் இடம் பெற்று நாளை காலை திருநாட்பாடற் பலிபூஜையும் மாதாவின் திருச்சொருப பவனியும் இடம்பெறும்.

இவ்வுற்சவ ஆராதனைகளை மிருசுவில் பங்குத் தந்தை அருட்திரு பீற்றர் துரைரத்தினம் அடிகள் நடத்துவார். (ஐ-117)

### நாளை

**ஆனி 18**

புதன்கிழமை

திதி: திரயோதசி

பின்இரவு 12.47 வரை:

நட்சத்திரம்: ரோகிணி

பின் இரவு 1.30 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 4 26- 5 56

ராகுகாலம்: 11.56-1.26

(பகலிலும் இரவிலும் பழைய நேரப்படி)

## இனப் பிரச்சினையில் இணக்கப்பாடு:

## ஜனாதிபதி தம்முடன் இதுவரை பேசவில்லை என்கிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 1

''இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் எனக்கும்—ஜனாதிபதிக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்ட பின்னர் இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி என்னை இதுவரை சந்தித்துப் பேசவில்லை''

இப்படி ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இப்படிக் கூறினார்.

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் செயற்படுவது தொடர்பாக ஜனாதிபதிக்கும், எனக்கும் இடையில் பொது இணக்கப்பாடு ஏற்பட்டபின்னர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு தடவை என்னைச் சந்தித்தார்.

ஆனால் ஜனாதிபதி என்னை இதுவரை சந்திக்கவில்லை.

இனப்பிரச்சினை தொடர்பாக ஏதாவது ஒரு கட்டத்தில் தாம் எடுக்கும் நடவடிக்கை குறித்துஜனாதிபதி என்னிடம் சொல்லத்தான் வேண்டும் என்றும் ரணில் தெரிவித்தார். (இ-3-150)

## சகல சிறுவர்களுக்கும் கட்டாயக் கல்வி!

### மீறினால் பெற்றோருக்கு தண்டனை

கொழும்பு, ஜூலை 1

ஐந்து வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் அனைவருக்கும் பாடசாலைக் கல்வியை கட்டாயமாக்க கல்வி உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கு ஏற்ற வகையில் சட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக கல்வி உயர் கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோர்களுக்குத் தண்டனை வழங்கும் விதத்தில் புதிய சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் இந்தப் புதிய நடைமுறையை அமுல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை எடுக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி நாட்டில் 3 ஆயிரத்து 700 கிராம அலுவலர் பிரிவுகளில் 13 ஆயிரத்து 600 சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் இருப்பது தெரியவந்துள்ளது. (ஐ-10)

## வடக்கே உணவு அனுப்பும் நடைமுறையில் மாற்றம்

வடக்குக்கு உணவுப் பொருள்கள் அனுப்பும் முறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது

அத்தியாவசிய சேவைகள் நாயகமாக நியமனம் பெற்றுள்ள சோமபால குணதீரவே இந்தப் புதிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளார்.

நிவாரணத்துக்கு வழங்கப்படும் அரிசி, தானியங்கள் ஆகியவற்றை அந்த அந்த மாவட்டங்களில் கொள்வனவு செய்ய அரச அதிபர்களுக்கு அனுமதி அளிப்பது இந்த மாற்றங்களின் ஓர் அம்சமாகும்.

ஏனைய பொருள்களைக் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் அனுப்ப ஏற்பாடு செய்யப்படும். (ஐ-150-3)

## பயிற்சி நெறி

யாழ்ப்பாணம் ஜூலை 1

யாழ். மாவட்டத்துக்கு உட்பட்ட சுகாதாரப் பரிசோதகர்களுக்கான பயிற்சி நெறியை யாழ்ப்பாணத்திலேயே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-15)

## கப்பல் சேவை

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு ''சஜிந்த'' கப்பல் சேவை இன்று நடைபெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இன்று கப்பலில் செல்வதற்கு பதிவு செய்தவர்களை காலை 7.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

கப்பலில் செல்ல பதிவு செய்தவர்களின் பட்டியல் இலக்கம் 567 இன்றுடன் ரத்துச் செய்யப்படுவதாகவும் சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைப் பணியகம் மூடுவது கைதானோர் நலனைப் பாதிக்கும்

## சர்வதேச மன்னிப்புச் சபை ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, ஜூலை 1

''மனித உரிமைப் பணியகம் மூடப்படுவது, தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களின் நலன்களைப் பாதிக்கும்.''

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குக் கடிதம் எழுதியுள்ளது.

அந்த அமைப்பின் செயலாளர் பி. ஏ. நேசன் ஜனாதிபதிக்கு இது தொடர்பாகக் கடிதம் எழுதியுள்ளார்.

தற்சமயம் செயற்படும் மனித உரிமைப் பணியகத்தின் பணிகளைத் தேசிய மனித உரிமை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கும் போது கைதானோர், தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

அதேசமயம் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இயங்க ஆரம்பிக்கும் வரை மூன்று முதல் 6 மாதம் வரை மனித உரிமை பணியகத்தை இயங்க அனுமதிக்குமாறு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இயங்கமுன்பே மனித உரிமைப் பணியகத்தை மூட எடுத்துள்ள முடிவு கைதுகள், காணாமல் போதல் ஆகியன அதிகரிக்க வழி ஏற்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

(இ-3-21-150)

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு இராசலிங்கம்

கீரிமலை வீதி, சித்தன்கேணியை வசிப்பிடமாகக் கொண்ட கதிரவேலு இராசலிங்கம் 29-06-97 அன்று அகால மரணமானார்.

அன்னார் இ. வள்ளியம்மை (செல்வி) யின் அன்புக் கணவரும், இ. இமஞ்சலி, இ. இராஜாராம் ஆகியோரின் தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29-06-97 அன்று நடைபெற்று பூதவுடல் விழாவெளி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
மு. தர்மலிங்கம்
(மைத்துனர்)

கீரிமலை வீதி,
சித்தன்கேணி.

(48117)

### இராஜமணி புஸ்பரத்தினம

(உதவி இணைப்பாளர் வட - கிழக்கு மாகாண இணைப்பு அலுவலகம், யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கைச் சேர்ந்த இராஜமணி புஸ்பரத்தினம் அவர்கள் 30-6-97 இல் சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் ராதாராணியின் அன்புக் கணவரும், முரளி கிருஸ்ணன் (யாழ்./ மாநகரசபை). கேசவி, நிவேதிதா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1-7-97) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்;
பு. முரளிகிருஸ்ணன்
(மகன்)

52, செல்லர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(48124)

### இராமலிங்கம் சுப்பிரமணியம்

மீசாலை மேற்கு கேணியடி வீதியைச் சேர்ந்த இராமலிங்கம் சுப்பிரமணியம் 29-06-97 அன்று காலமானார்.

அன்னார் பாறுப்பிள்ளையின் அன்புக் கணவரும், இராசம்மா, பகவதிப்பிள்ளை, காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, சதாசிவம், வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரரும், இந்திராணி, மகேஸ்வரி, பூபாலசிங்கம், பாலகுமார், சசிகலாதேவி காலஞ்சென்ற தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைராசா (சா. ப. நோ. கூ. ச. களஞ்சியப் பொறுப்பாளர்), தவராசா, சிவலோகநாதன் (ஆசிரியர், கி/ அக்கராயன் ம. வி.), கோமளேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30-6-97) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. துரைராசா
(மருமகன்)

மீசாலை.

(சி/1044)

### கனகசபை கந்தையா

கொக்குவில் நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய P. W. D. ஓவசியர் கனகசபை கந்தையா 30- 06- 97 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், நாகரத்தினம் (லண்டன்), செல்வராசா (நந்தாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சற்குணராசா (கொழும்பு), சிவராசா (கொக்குவில்), சாந்தராசா (ஜேர்மனி), சந்திரராசா (லண்டன்), சற்குணேஸ்வரி (லண்டன்), சிவலோகராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிர்மலா, உஷாதேவி, கிளி, றீட்டா, தவராசா, மஞ்சுளா ஆகியோரின் மாமனாரும் அசோக்குமார், தர்மேந்திரா, காயத்திரி, மாதங்கி, சிந்துஜா. நீலன், நிசாந்தி, செந்தூரன், சஞ்சீவன், தர்ஷிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 01- 07- 97 செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரின் சண்டிலிப்பாய் ''சற்குணவாசா'' இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள்.

''சற்குண வாசா'',
சண்டிலிப்பாய்.

(47303)

## உண்ணாவிரதம்

திருகோணமலை, ஜூலை 1

திருகோணமலை, குச்சவெளி ஆகிய பகுதிகளில் கள் விற்பனையை கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து பறித்து தனியாரிடம் குத்தகைக்கு வழங்க முடிவு செய்தமையைக் கண்டித்து நேற்று 100 தொழிலாளர்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

இதுவரை பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த கள் விற்பனையைக் குத்தகைக்கு வழங்கும் முடிவைக் கண்டித்தே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

## ஹொங்கொங்...

(முதலாம் பக்கத் தொடர்)

பிரிட்டனின் 156 ஆண்டு கால அதிகாரத்தையும், ஆசியாவில் கடைசி காலனி ஆதிக்கத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்த இந்த சரித்திர நிகழ்வை சீன மற்றும் ஹொங் கொங் மக்களும் உலகெங்கும் வாழும் கோடிக்கணக்கான மக்களும் கண்டு களித்தனர்.

ஹொங் கொங்கைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் சீன அதிபர் ஜியாங் செமின் உணர்ச்சி பூர்வமாக உரையாற்றினார்.

ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் மற்றும் பல நாடுகளின் சிறப்புப்பிரதிநிதிகள் உட்பட எழுநூற்றுக்கு மேற்பட்ட முக்கிய பிரமுகர்கள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

ஹொங்கொங்கை சீனாவிடம் கையளிக்கும் வைபவங்கள் அங்குள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த விக்ரோரியா துறைமுகத்தில் உள்ள மாநாட்டு மண்டபப் பகுதியில் நேற்றிரவு 11.30 மணி முதல் ஆரம்பமாகின.

முன்னதாக நடந்த பிரியாவிடை வைபவத்தில் ஹொங்கொங்கிற்கான பிரிட்டனின் கடைசி ஆளுநர் கிறிஸ்பாட்டன் கண்ணீர் மல்க ஹொங்கொங் மக்களிடம் விடை பெற்றுக் கொண்டார்.

ஹொங்கொங் சீனாவின் அதிகாரத்தின் கீழ் வந்ததை அடுத்து ஆயுதங்கள், கவச வாகனங்கள், போர்க் கப்பல்கள் சகிதம் சீனாவின் 4 ஆயிரம் மக்கள் விடுதலை இராணுவத்தினர் இன்று அதிகாலை ஹொங்கொங் எல்லைக்குள் பிரவேசித்தனர்.

(ஐ)

## சங்கீதம் - நடனம் பெறுபேறுகள் இன்னும் வெளிவரவில்லை

1995 ஆம் ஆண்டு நடந்த ஜி.சீ.ஈ. (சாதாரண) விசேட பரீட்சையின் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களின் முடிவுகள் இன்னமும் வெளிவரவில்லை.

இந்தப்பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்ட சமயம் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் நடைபெறவில்லை.

பின்னர் செயல்முறைப் பரீட்சை நடைபெற்று அவற்றின் புள்ளிகள் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டன. எனினும் பல மாதங்களாகியும், இன்று வரை அந்தப் பாடங்களுக்கான முடிவுகள் வெளிவரவில்லை.

ஒருபாடம் போதாத நிலையில் உயர்தர வகுப்பில் தமது கல்வியை தொடர முடியாத இக்கட்டான நிலையில் பலர் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று — 96 ஆம் ஆண்டு நடந்த ஜி சீ. ஈ. (சாதாரணதர) பரீட்சையில் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான முடிவுகளும் வெளிவரவில்லை.

## தனிமையில் இருந்தவர் கொலை

தனிமையாக வாழ்ந்த ஒருவர் தமது வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

நெடுந்தீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வராசா மரியதாஸ் (வயது 65) என்பவரே இறந்தவர் ஆவார்.

இவரது உடலில் அடிகாயங்கள் இருந்ததாகவும் வீட்டின் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்களும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. வீட்டில் திருட முயன்றவர்கள் முன்னதாக உறக்கத்தில் இருந்த அவரைக் கொலை செய்திருக்கலாமென நம்பப்படுகிறது.

(இ 111)

## அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி

பாடசாலைகளுக்கு இடையிலான அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டிகள் கொழும்பில் இரு கட்டங்களாக நடைபெறவிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

எதிர்வரும் 5, 6 ஆம் திகதிகளில் நடைபெறும். முதலாவது கட்டப் போட்டிகளில் யாழ்ப்பாணத்திலிருந்து 11 மாணவரும்—

எதிர்வரும் 17,18,19 ஆம் திகதிகளில் நடைபெறும் இரண்டாம் கட்டப்போட்டிகளில் யாழ்ப்பாணத்திலிருந்து 18 மாணவர்களும்— பங்குபற்றவுள்ளனர்.

மாகாண மட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களும், மாணவர் அணிகளைச் சேர்ந்தோருமே கொழும்பில் நடைபெறும் அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டிகளில் பங்குபற்றவிருக்கின்றார்கள். (உ)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

தமிழ் அரசியல் கட்சிகளின் முடிவை அறிந்ததும் தமது முடிவை தற்போது மாற்றியுள்ளனர் எனவும் —

அவர்கள் அரசாங்கத்தை ஆதரித்து வாக்களிக்க முடிவு செய்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

விவாதத்தின் போது புளொட் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாய் இருக்க மாட்டார்கள் எனவும் —

அவசர காலச் சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களிப்பது என ஈ.பி.டி.பி. அமைப்புத் தீர்மானித்துள்ள போதிலும் அதை எவ்வாறு அனுசரிப்பது என்பது தொடர்பாக இதுவரை இறுதி முடிவு எடுக்கவில்லை எனவும் —

அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

## வயோதிபர் எண்ணிக்கை அதிகரிப்பு

உலகில் வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் குழந்தைகளின் எண்ணிக்கை விகிதம் குறைந்துவருவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வாழ்க்கைத்தர உயர்வு நவீன மருத்துவ வசதிகள் ஆகியவற்றால் மனிதனின் ஆயுள் நீடிப்பதாலும்

ஒரு குழந்தைக்கு மேல் பெற்றுக் கொள்ள தம்பதியர் விரும்பாததாலுமே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஜப்பானில் குழந்தைகளின் எண்ணிக்கையை விட வயோதிபர்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளதாக நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. (இ-5)

## மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

பட்ட தென்னை மரத்தில் இருந்து விழுந்து படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் கடந்த சனிக்கிழமை யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று முன்தினமிரவு அங்கு மரணமானார்.

யாழ்ப்பாணம் ஆசீர்வாதப்பர் வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னத்துரை மனோகரன் (வயது 39) என்பவரே காயமடைந்து பின்னர் உயிரிழந்தவராவார்.

பட்டதென்னை மரத்தில் குடியிருந்த ''கிளி'' யைப் பிடிக்க ஏறிய வேளையே மரத்துடன் முறிந்து கீழே விழுந்து படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற மரண விசாரணையின்பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-15)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

இருந்து தன் நடவடிக்கைகளை இரகசியமாக மேற்கொண்டு வருகிறாரா என்பது மர்மமாக உள்ளது.

இந்த விடயத்தில் பல்வேறு ஊகங்கள் கூறப்படுகின்றன.

பிரபாகரனின் முக்கிய செய்தி ஒன்றுடன் சென்ற திலகர் வெளிநாடு ஒன்றின் சாதகமான பதிலுடன் மீண்டும் வன்னி திரும்பியுள்ளார்.

இராணுவ ரீதியான இரகசிய உதவிகளைப் புலிகளுக்கு வழங்க மேற்கு நாடு ஒன்றும் இன்னொரு தீவிரவாத இயக்கமும் சம்மதம் தெரிவித்துள்ளன என்றும் ஒரு தகவல் கூறுகிறது.

திலகரின் செயற்பாடுகள் திருப்தி அளிக்காமையால் அதிருப்தி கொண்ட பிரபாகரன் சர்வதேசப் பொறுப்புகளில் இருந்து திலகரை நீக்கி அவரை வன்னியில் தங்கும்படி சொல்லிவிட்டார் என மற்றொரு தகவல் கூறுகின்றது.

இவ்வாறு அந்தப் பத்திரிகை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்01-07-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org